இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 30-06-2024

# சாதியா? நீதியா?

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்த முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், அந்தத் தீர்மானத்தை உடனடியாக பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியும் வைத்திருக்கிறார்.

**“இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழிவகை செய்ய சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பு அவசியம் என்று இப்பேரவை கருதுகிறது. எனவே 2021-ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதிவாரியான கணக்கெடுப்பையும் இணைத்தே நடத்தவேண்டும் என்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது” - என்பதுதான் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும்.**

இந்தியா என்பது பல்வேறு இன, மொழி, சாதி, பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்ட மக்கள் வாழும் நாடு. வறுமையும், ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும், மற்றும் பல்வேறு சமூகக் காரணிகளும் மக்களை வதைத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் இங்குள்ள வளமானது அனைவருக்கும் அவர்களது பங்குக்கு ஏற்ப பிரித்து பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதுதான் உண்மையான சமூக நீதியாக அமைய முடியும். கல்வி, வேலைவாய்ப்பில் வழங்கும் இடஒதுக்கீடு உரிமை என்பது சமூகநீதியின் அடிப்படையான கருத்துரு ஆகும். இடஒதுக்கீட்டைத் தாண்டி அனைவர்க்கும் அதிகாரம் என்ற இறுதி இலக்கையும் அடைய வேண்டும். அதற்கு முதலாவதாக யார் யார் எந்த அடிப்படையில் இருக்கிறார்கள், வாழ்கிறார்கள், யார் இந்தச் சமூகத்தில் இருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள், அவர்களது தேவைகள் என்ன என்பதை அறிய வேண்டும். அதற்காகவே சாதிவாரிக் கணக்கெடுப்பு அவசியமாகிறது.

1901 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 1,646 சாதிகள் இருப்பதாக வகைப்படுத்தப்பட்டது. 1941 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 4,147 சாதிகள் இருப்பதாக வகைப்படுத்தப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதி விவரங்கள் சேகரிக்கப்படவில்லை. பட்டியல் சாதியினர் விவரங்கள் மட்டுமே சேகரிக்கப்பட்டது. ஆனால் 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சாதிதொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டாலும், அவை வெளியிடப்படவில்லை. 2021-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடத்தப்படவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் என்பது சமூகநீதியை மையக் கருத்தாக நடைபெற்ற தேர்தல் ஆகும். ‘இந்தியா’ கூட்டணி ஆட்சிக்கு வந்தால் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்துவோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி வந்தார்கள். ராகுல் காந்தி அனைத்துக் கூட்டங்களிலும் இதனைச் சொல்லி வந்தார்.

“எங்கள் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும். 70 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு எடுக்கும் மிகமுக்கியமான நடவடிக்கையாக இது இருக்கும். இந்தக் கணக்கெடுப்பின் மூலம் நாட்டின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்துகொள்ள முடியும். அதன்பிறகுதான் நாடு அடுத்து எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்பதை மதிப்பீடு செய்ய முடியும். எனக்கு சாதியில் ஆர்வம் இல்லை, நியாயத்தில் ஆர்வம் உள்ளது. சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தினால் 90 விழுக்காடு மக்களுக்கு நியாயம் கிடைத்தே தீரும்” என்று சொன்னார் ராகுல்.

**சமூகத்தின் அளவுகோலாக சாதி இருக்கும்போது, சமூகக் கோரிக்கைகளின் அளவுகோலாக சாதி இருப்பதில் தவறும் இல்லை.**

ஒவ்வொரு சமூகமும் தங்களுக்கு இத்தனை விழுக்காடு இடஒதுக்கீடு வேண்டும் என்கிறது. ‘மொத்த இடஒதுக்கீடு அளவு என்பது 50 விழுக்காடுக்கு அதிகமாக இருக்கக் கூடாது’ என்று உச்சநீதிமன்றம் சொல்கிறது. மக்கள் கோரிக்கையாக இருந்தாலும், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பாக இருந்தாலும் அதற்கு உண்மையான தரவுகள் அவசியம் ஆகும். எனவேதான் சாதிவாரிக் கணக்கெடுப்பு மிகமிக அவசியத் தேவையாகும்.

பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்த அடிப்படையில் 27 விழுக்காடு என கணிக்கப்பட்டது என்றால் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1931 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பை வைத்துத்தான் 27 என கணிக்கப்பட்டது. ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முந்தைய கணிப்பு இது. புதிதாக எடுத்தால் தானே உண்மையான மக்கள்தொகை தெரியவரும். அதற்காகவும் இந்தக் கணக்கெடுப்பு மிக அவசியமாகும். இதனை ஒன்றிய அரசுதான் எடுக்க வேண்டும். இதனை சட்டமன்றத்தில் மிகச் சரியாக விளக்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948-ன்கீழ் ஒன்றிய அரசுதான் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். மாநில அரசால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த முடியாது. சமூக, பொருளாதார புள்ளிவிவரங்களை மட்டுமே எடுக்க முடியும் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். “2008-ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் சட்டத்தின்கீழ் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள இயலாது” என்பதையும் உறுதிபடச் சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**‘Survey’ என்ற பெயரில் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது வேறு; மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ‘census’ வேறு. மாநில அரசுகள் ‘Survey’ மட்டும்தான் எடுக்க முடியும். ஒன்றிய அரசு தான் ‘census’ எடுக்க முடியும்.**

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246-ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணி அது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பினை 2021-ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை பா.ஜ.க. அரசு. இனியாவது அதனைச் செய்ய வேண்டும்.

**சாதியை அளவுகோலாகக் கொண்ட சமூகத்தில் சமூக நீதி மிகமிக அவசியமாகும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.06.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தங்களது துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு இந்தியாவில் அதிகரிப்பு!

## அமெரிக்கா கடும் கண்டனம்!

**வாஷிங்டன், ஜூன் 30-**

**இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான மதமாற்றச் சட்டங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுகள் அதிகரித்திருப்பது கவலையளிப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் தெரிவித்தார்.**

‘சர்வதேச மதச் சுதந்திரத்துக்கான ஆண்டறிக்கையை’ அவர் புதன்கிழமை வெளியிட்டார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் 10 மாநிலங்களில் மதமாற்றத்துக்கு எதிரான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சில மாநிலங்களில் திருமணத்துக்காக வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கும் சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன.

வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தின்கீழ் பொய் வழக்குகள் மூலம் கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் கைது செய்யப்படுவதாகவும் சிறுபான்மையினர் புகார் கூறுகின்றனர் என ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக ஆன்டனி பிளிங்கன் பேசியதாவது: மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்க உலகளவில் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து கடினமாகப் போராடி வருகின்றனர். ஆனால், இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

மதமாற்றத்துக்கு எதிரான சட்டங்கள், வெறுப்புப் பேச்சுகள், சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அவர்களின் வீடுகளை இடித்தல் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது கவலையளிக்கிறது என்றார்.

இந்தியாவில் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அமெரிக்கா கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை இந்தியா ஏற்கெனவே நிராகரித்தது. மேலும், தவறான தகவல்கள் மற்றும் சரியான புரிதல் இன்மையால் இதுபோன்ற அறிக்கைகளைத் தயாரித்து சில அமெரிக்க அதிகாரிகள் வெளியிடுகின்றனர். அமெரிக்காவுடனான உறவை நாங்கள் மதிக்கிறோம். உண்மையாகவே கவனத்தில் கொள்ளவேண்டிய விவகாரங்களில் நாங்கள் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவோம்’ என இந்தியா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### ‘நீட்’ தேர்வு என்பதே மோசடிதான்! குளறுபடிகள் நிறைந்த நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும்

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து - கழக மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூன் 30–

கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–

நீட் தேர்வு என்பது ஏழைஎளிய மாணவர்களை தகுதி என்ற பெயரில் மருத்துவக் கல்வி பயிலவிடாமல் ஓரங்கட்ட பாசிச பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்ட தேர்வு. மேலும், நீட் தேர்வு என்பதே ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு சாதகமாகவும், வசதி படைத்தோருக்கும் மட்டுமே பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட தேர்வு முறை. ஆள்மாறாட்டம் செய்வது, வினாத் தாள்களை திருடுவது, விடைத்தாள்களை மாற்றி வைப்பது, மதிப்பெண்கள் வழங்குவதில் குளறுபடிகள் என்று இத்தேர்வே முழுமையான மோசடியாக உள்ளது. இதனை முன்பே அறிந்ததால் தான் தி.மு.க. நீட் தேர்வை ஆரம்பம் முதல் எதிர்த்து வருகிறது.

இந்த ஆண்டு, இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வான நீட் தேர்வை தேசிய தேர்வு முகமை, கடந்த மே 5ஆம் தேதி நடத்தியது. நாடு முழுவதும் 4,750 மையங்களில் இந்த தேர்வு நடத்தப்பட்டது. இதில் 24 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதினர். இதன் முடிவுகள் ஜூன் 14ஆம் தேதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், ஜூன் 4ஆம் தேதியே முடிவுகள் வெளியாகின.

இந்த ஆண்டு நீட் தேர்வு நடைபெற்ற அன்றே வினாத்தாள் கசிந்ததாக பல்வேறு புகார்கள் எழுந்தன. இது ஒன்றும் புதிதல்ல. கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2020 ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2021ஆம் ஆண்டு தேர்வில் 15 பேர் முறைகேடு செய்ததாக கைது செய்யப்பட்டார்கள்.

நீட் தேர்வு என்பது, இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் என்று நான்கு பாடப்பிரிவுகளில் இருந்து 45 கேள்விகள் வீதம் 180 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் 4 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 720 மதிப்பெண்கள் கிடைக்கும். ஒரு கேள்விக்கு தவறாக பதில் அளித்தால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். ஒரு கேள்விக்கு பதில் அளிக்காமல் விட்டிருந்தால் 716 மதிப்பெண்கள் கிடைக்கும். ஒரு கேள்விக்கு மட்டும் தவறாக பதில் அளித்திருந்தால் அவருக்கு 179 கேள்விகளுக்கான 716 மதிப்பெண்களில் ஒரு மதிப்பெண் குறைக்கப்பட்டு 715 மதிப்பெண்கள் பெறலாம். இப்படி இருக்கு, சில மாணவர்கள் 719 மற்றும் 718 மதிப்பெண்ணும் பெற்றிருந்தனர். நீட் தேர்வு மதிப்பீட்டு முறைப்படி இந்த மதிப்பெண்களை எந்த மாணவரும் பெறவே முடியாது. எனவே இந்த தேர்வில், ஒருவர் பெறுவதற்கு சாத்தியமில்லாத மதிப்பெண்களை சில மாணவர்கள் பெற்றிருந்தது பலருக்கு சந்தேகத்தை எழுப்பியது.

இதற்கு முன்பு கடந்த 8 ஆண்டுகளில் மொத்தமாக 7 பேர் மட்டுமே முழு மதிப்பெண் பெற்ற நிலையில், இந்த ஆண்டு 67 மாணவர்கள் முழு மதிப்பெண்ணான 720 மதிப்பெண் பெற்றுள்ளனர். அதிலும், ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் உள்ள ஒரு மையத்தில் தேர்வு எழுதியவர்களில் 6 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இதற்கெல்லாம் மேலாக 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் கூட, நீட் தேர்வில் 700க்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்றிருப்பது நீட் தேர்வு என்பது குளறுபிடிகளின் உச்சமாக இருப்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

இவ்வளவு மாணவர்கள் முதலிடம் பிடித்தது, எவ்வாறு சாத்தியமாகும் என்றால், வினாத்தாள் தேர்வுக்கு முன்பே வெளி வருவது, பணம் பெற்றுக் கொண்டு விடைகளை பகிர்வது, ஆள் மாறாட்டம் செய்து தேர்வு எழுதுவது என பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் இத்தேர்வு முறையே மோசடி என்று உறுதி செய்கிறது. மேலும், நீட் தேர்வில் முறைகேடுகள் நடந்தது உண்மை என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே குறிப்பிட்ட ஹரியானாவில் ஒரு தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய 6 மாணவர்கள், என்.சி.இ.ஆர்.டி.,யின் முந்தைய பாடத் திட்டத்தில் விடை எழுதுவதா, புதிய பாடத்திட்டத்தில் விடை எழுதுவதா என்று சந்தேகம் ஏற்பட்டதால் அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்க முடியவில்லை என கூறி, காலதாமதம் ஏற்பட்டதாகவும், இழந்த நேரத்துக்காக, கருணை மதிப்பெண் வழங்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். உடனே, தேசிய தேர்வு முகமை தானாக முன்வந்து அந்த தேர்வு மையத்தையும் சேர்த்து அருகிலிருந்த தேர்வு மையங்களில் தேர்வு எழுதியவர்களுக்கும் சேர்ந்து 1563 மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கப்படும் என கூறி வழக்கு முடிக்கப்பட்டது. இதனால் மட்டுமே முழு மதிப்பெண்கள் பெற்ற 67 மாணவர்களில், 50 பேர் கருணை மதிப்பெண் அடிப்படையில் முதலிடம் பெற்றுள்ளனர்.

குஜராத் மாநிலம், பன்ச் மகால் மாவட்டம், கோத்ராவில் உள்ள தேர்வு மையத்தில் நடந்த நீட் தேர்வில் பெரிய முறைகேடு நடந்த நாடறிந்ததே. அதாவது, தேர்வு மையத்தில் ஜெய் ஜலராம் பகுதியில் உள்ள பள்ளியைச் சேர்ந்த இயற்பியல் ஆசிரியர் துஷார் பட் என்பவர், தேர்வு மையத்தின் துணை சூப்பிரண்டாக இருந்துள்ளார். அவர், பணியில் உள்ள தேர்வு மையத்தில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களிடம், ”நீட் தேர்வில் விடை தெரியாவிட்டால் அதனை எழுதாமல் விட்டு விட சொல்லியும், தேர்வு முடிந்த பிறகு சரியான விடைகளை அவரவர் விடைத்தாளில் எழுதி தரப்படும் எனக்கூறி ரூ. 10 கோடி அளவிற்கு பேரம் பேசி 16 மாணவர்களின் தேர்வு எண் மற்றும் அவர்களது பெயர் கொண்ட விவரத்தை செல்போனில் வைத்துள்ளார். இந்த சம்பவம் குறித்து வெளியே செய்தி வரவே அவர் மாட்டிக் கொண்டார். ஆனால், இதில் சந்தேகம் எழுப்புவது என்னவென்றால், முறைகேடு நடைபெற்ற ஒரு இடத்தில் மட்டும் கையும் களவுமாக மாட்டிக் கொண்டார். ஆனால், எத்தனை இடங்களில் மறைமுகமாக முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது யாருக்கு தெரியும்?

ஒன்றிய பா.ஜ.க. அரசு நீட் தேர்வினை 2017இல் கொண்டு வந்தது முதல் தி.மு.க. கடுமையாக எதிர்த்து வந்தது. தமிழ்நாட்டிலுள்ள முற்போக்கு சிந்தனை கொண்ட அத்தனை அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் நீட் தேர்வை கடுமையாக எதிர்த்து வந்தன. அப்போதெல்லாம் பாசிச பா.ஜ.க. அரசு தி.மு.க. மட்டும் தான் நீட் தேர்வை எதிர்கிறது என்றும்; தமிழ்நாடு மட்டும் தான் நீட் தேர்வை வேண்டாம் என்று சொல்கிறது என்றும் விமர்சித்து வந்தது. தி.மு.க.வின் போராட்டங்களை விளம்பர அரசியல் என்றெல்லாம் சொல்லி குற்றம் சாட்டியது. அதற்கு பதிலடி தரும் வகையில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு தான் சமூகநீதியின் தொட்டில்! சமவாய்ப்பு, சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றிற்கு எதிரான நீட் தேர்வை இந்தியாவில் தமிழ்நாடு தான் முதலில் எதிர்க்கும் என்பதில் எந்த ஐயமில்லை என்று தெரிவித்து, என்றைக்கும் நீட் தேர்வை எதிர்த்தே தீர வேண்டுமென்று சென்னார். ஆனால், இன்று நீட் தேர்வில் உள்ள மோசடிகள் மற்றும் குளறுபிடிகளை உணர்ந்த பா.ஜ.க.வை சேராத அரசியல் கட்சிகள், பிற மாநில அரசுகள், ஏன் ஒட்டுமொத் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு கல்வியாளர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் நீட் தேர்வை கடுமையாக எதிர்க்க தொடங்கி விட்டனர். நீட் தேர்விற்கு எதிராக தமிழ்நாட்டில் தொடங்கிய அதிர்வலைகள் இன்று இந்தியா முழுவதும் பரவியிருப்பதை காண முடிகிறது.

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏற்கனவே நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்டமசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தராத நிலையில், நேற்று முன்தினம் (28.6.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தை உடனடியாக செயல்படுத்திட வேண்டுமென்றும் நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய மோசடிகளை, குளறுபிடிகளை களைவதற்கு மேல்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், நீட் எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வை நடத்தியே தீருவேன் என்ற எதேச்சதிகாரப் போக்கினை கடைபிடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க. மாணவர் அணிச் சார்பில் வரும் 3.7.2024 அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (28.06.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமிழ்நாட்டில் நீர்வளத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், நீர்ப்பாசனம், பாதுகாப்பான குடிநீர் மற்றும் மாநில நீர் பாதுகாப்பு ஆகியவற்றை நிறைவேற்றி தமிழ்நாட்டை நீர்மிகை மாநிலமாக மாற்றும் குறிக்கோளை உள்ளடக்கிய நீர்வளத்துறையின் புதிய இலச்சினையை (Logo) வெளியிட்டார். உடன், நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத்துறையின் சிறப்புச் செயலாளர் க.முருகன், முதன்மை தலைமைப் பொறியாளர் கு.அசோகன், திருச்சிராப்பள்ளி மண்டல தலைமைப் பொறியாளர் எம்.சுப்பிரமணியன் மற்றும் நீர்வளத் துறை பொறியாளர்கள் ஆகியோர் உள்ளனர்.